කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

## இலங்கைக்கான பொதுவான வானிலை முன்னறிவிப்பு

தேசிய வளிமண்டலவியல் நிலையத்தின் முன்னறிவிப்புப் பிரிவால் வெளியிடப்பட்டது.

### 2026 ஏப்ரல் 30ஆம் திகதிக்கான பொதுவான வானிலை முன்னறிவிப்பு

**2026 ஏப்ரல் 29ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு வெளியிடப்பட்டது.**

**நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் பி.ப. 1.00 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.**

சப்ரகமுவ, மத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் **50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த** மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப் படுகின்றது.

தென் மாகாணத்தில் சில இடங்களில் காலை வேளையிலும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனி மூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப் படுகின்றார்கள்.**

Rainfall amount (mm): Light: 00-12.5, Light to moderate: 12.5-25, moderate: 25-50, Fairly Heavy rain: 50 -100, Heavy rain: 100 – 150, Very heavy rain: 150 or more.

වර්ෂාපතනය(මි.මී) : සිහින් වැසි: 00-12.5, සිහින් හෝ මද වැසි: 12.5-25, මද වැසි: 25-50, තරමක් තද වැසි: 50 -100, තද වැසි:100 – 150, ඉතා තද වැසි: 150 හෝ ඊට වැඩි

மழைவீழ்ச்சி அளவு (மி.மீ): சிறிதளவு: 00-12.5, சிறிதளவிலிருந்து மிதமானது வரை: 12.5-25, மிதமானது: 25-50, ஓரளவு பலத்த மழை: 50 -100, பலத்த மழை: 100 – 150, மிகப் பலத்த மழை: 150 க்கும் அதிகமானது

කාලගුණ විද්‍යා දෙපාර්තමේන්තුව
வளிமண்டலவியல் திணைக்களம்
Department of Meteorology

TP : 011 2686686
Fax : 011 2691443
E-mail : metnmc@gmail.com
Web : www.meteo.gov.lk

**நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் வானிலை மற்றும் கடல் நிலை**
தேசிய வளிமண்டலவியல் நிலையத்தின் முன்னறிவிப்புப் பிரிவால் வெளியிடப்பட்டது

## அடுத்த 24 மணித்தியாலத்துக்கான, நாட்டைச் சூழவுள்ள கடற் பரப்பிற்கான வானிலை முன்னறிவிப்பு

**2026 ஏப்ரல் 29ஆம் திகதி பிற்பகல் 02.00 மணிக்கு வெளியிடப்பட்டது.**

**மழை நிலைமை:**

புத்தளத்திலிருந்து கொழும்பு மற்றும் காலி ஊடாக ஹம்பாந்தோட்டை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் பல இடங்களில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**காற்று :**

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்குத் திசையிலிருந்து வீசக் கூடும். காற்றின் வேகமானது **மணித்தியாலத்துக்கு 25-35 கிலோ மீற்றர் வரை** காணப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது. புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது **மணித்தியாலத்துக்கு 45 கிலோ மீற்றர் வரை** அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

**கடல் நிலை:**

புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசந்துறை வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகளில் சாதாரண முதல் மிதமான அலை வரை காணப்படும் என எதிர்பார்க்கப் படுகின்றது.

**இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற் பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற் பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும்.**

Rainfall amount (mm): Light: 00-12.5, Light to moderate: 12.5-25, moderate: 25-50, Fairly Heavy rain: 50 -100, Heavy rain: 100 – 150, Very heavy rain: 150 or more.

වර්ෂාපතනය(මි.මී) : සිහින් වැසි: 00-12.5, සිහින් හෝ මද වැසි: 12.5-25, මද වැසි: 25-50, තරමක් තද වැසි: 50 -100, තද වැසි:100 – 150, ඉතා තද වැසි: 150 හෝ ඊට වැඩි

மழைவீழ்ச்சி அளவு (மி.மீ): சிறிதளவு: 00-12.5, சிறிதளவிலிருந்து மிதமானது வரை: 12.5-25, மிதமானது: 25-50, ஓரளவு பலத்த மழை: 50 -100, பலத்த மழை: 100 – 150, மிகப் பலத்த மழை: 150 க்கும் அதிகமானது